Registered as a NewsPaper

விலை ரூபா 7.00


# ஈழநாதம்


EELANATHAM   மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14   திருவள்ளுவர் ஆண்டு 2034   ஆனி - 13   28-06-2003   சனிக்கிழமை   ஓசை 130

உங்களுக்கு உதவுவோம் வாருங்கள்
அச்சகங்கள் அலுவலகங்கள் மாணவர்களுக்கு
சாணக்கியா
அச்சுப் பொருட்கள்
காகிதாதிகள் வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி.





யாழ் .பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வின் போது....

## யாழ்.இல் நிகழ்ந்த பொங்குதமிழ்

# உணர்வெழுச்சியுடன் திரண்டெழுந்த வரலாறு கண்டிராத மக்கள் கூட்டம்

## பேரணிகளாக வந்து சேர்ந்தனர்

(யாழ்ப்பாணம்)

**"எமது நிலம் எமக்கு வேண்டும். நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்வதற்காக இராணுவத்தினரே நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்" என்ற தொனிப்பொருளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற பொங்குதமிழ் - 2003 நிகழ்வில் லட்சக்கணக்கான மக்கள் உணர்வெழுச்சியுடன் திரண்டெழுந்து பேரணிகளாக வந்து யாழ். பல்கலைக்கழக விளையாட்டரங்கில் திரண்டனர்.**

பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வின் ஆரம்பத்தில் பிற்பகல் 3.00 மணியளவில் மாபெரும் பேரணிகள் பரமேஸ்வராச் சந்தி, கலட்டிச் சந்தி, திருநெல்வேலிச் சந்தி ஆகிய மூன்று முனைகளில் இருந்தும் ஆரம்பமாகின.

பரமேஸ்வரா சந்தியில் இருந்து ஆரம்பமான பேரணியில் ஆரம்பத்தில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் மிகப்பெரிய

(8ம்பக்கம் பார்க்க...)

## யுத்தமேகம் எம்மில் திணிக்கப்படும் சூழ்நிலையை மாற்ற விரும்புகிறோம்

### பொங்கு தமிழ் அறைகூவலில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பாரம்பரிய தாயகம். தமிழர்களின் தாயகத்திலிருந்து சிறிலங்கா இராணுவம் வெளியேறி தமது சொந்த ஊர்களுக்குத் திரும்ப வேண்டும் என நேற்று இடம்பெற்ற பொங்கு தமிழ் நிகழ்வில் வெளி யிடப்பட்ட பொங்குதமிழ் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி 15 மாதங்களுக்கு மேலாகிவிட்டது. காலம் கடந்து போயுள்ளது. நமது இயல்பு வாழ்க்கை இழுத்தடிக்கப்பட்டு பேச்சு வார்த்தை இடை நின்று போயுள்ளது. யுத்த மேகம் எம்மில்

(8ம்பக்கம் பார்க்க...)

## மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் விடுதலைப் போராட்டங்களுக்கு உந்து சக்தி

### -யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் விடுதலைப் போராட்டத்தை முன் நோக்கி உந்திச செல்லும் உந்து சக்தியாகவே அமைகின்றது என யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்;

(8ம்பக்கம் பார்க்க...)

## அச்சமூட்டும் நோக்கத்துடன் தாழப்பறந்த உலங்கு வானூர்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று பொங்குதமிழ் நிகழ்வு இடம்பெற்றுக் கொண்டிருந்த போது சிறிலங்கா விமானப் படையின் உலங்கு வானூர்திகள் மைதானத்தின் மேல் தாழப்பறந்து அச்சமூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டன.

இரண்டு வானூர்திகள் பல தடவைகள் அப்பகுதிகளில் தாழப் பறந்து அச்சுறுத்தும் நடவடிக்கை

(8ம்பக்கம் பார்க்க...)

## ஈ.பி.டி.பி.யின் அதரவாளர் அக்கரைப்பற்றில் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஈ.பி.டி.பி.யின் ஆதரவாளர் ஒருவர் பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது. நடேசன் சுதர்சன் (வயது 24) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று இராமகிருஸ்ணன் வீதியில் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த

(8ம்பக்கம் பார்க்க...)

## கிழக்கில் இரு வாரங்களுக்குள் புலிகள் பெரும் தாக்குதலுக்குத் திட்டம்

### -சனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

இன்னமும் இரு வாரங்களுக்குள் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதலை நடத்தத் தயாராகிவருவதாக ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை பொதுசன ஐக்கிய முன்னணி எச்சரிக்கை விடுத்துள்ளது. இத் தகவலை பொதுசன ஐக்கிய முன்னணிப் பேச்சாளர் சரத் அமுனுகம செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

புலிகள் யுத்தத்திற்குத் தயாராகி வருவதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்து சில நாட்களில் எந்த இடத்தில் தாக்குதல் நடைபெறப்போகிறது என்பது குறித்து பேசியுள்ளார்.

யுத்தமொன்று ஆரம்பிக்கப்

(8ம்பக்கம் பார்க்க..)

### வீரவணக்கம்

முல்லை மாவட்டத்தில் நேற்று முன்தினம் சுகயீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார். நாட்டுப்பற்றாளர் செல்லன் தர்மலிங்கம் (முல்லைத்தீவு) தற்போதைய முகவரி நீராவிப்பிட்டி முள்ளியவளை (முல்லைத்தீவு) என்பவரே சாவடைந்தவராவார்.

இவருக்கு விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## வரிவிளம்பரம்

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும் பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3275)

### தொலைந்துவிட்டது

கானகன் என்பவருடைய புத்தகங்கள் அடங்கிய பேக் ஒன்று 26.06.03 அன்று கிளிநொச்சி துயிலும் இல்லத்திற்கும் முறிப்புக் குளத்திற்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து இதைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். சன்மானம் வழங்கப்படும் (3407)

### வவுனியா ஒப்ரிக்கல்

கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்தியத் துண்டுகளுக்கும் உடன் கண்ணாடி வழங்கப்படும். வவுனியா ஒப்ரிக்கல்-30, பஸ்நிலையம், வவுனியா.(3343)


### பிற்போடப்பட்டுள்ளது

எதிர்வரும் முதலாம் திகதிநடைபெற இருந்த கல்வி, சுகாதாரக்குழுக் கூட்டங்கள் தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் ஏழாம்திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது. என கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

## முன்பள்ளி விளையாட்டு

(அலுவலக செய்தியாளர்)

கிளிமாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் கிளி.மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய ஒருங்கிணைப்பின் முன்பள்ளி சிறார்களின் திறனாய்வுப் போட்டி நடைபெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தினால் நடாத்தப்படும் கண்ணகைபுரம் திலீபன் முன்பள்ளி,முட்கொம்பன் தமிழ் ஒளிர் முன்பள்ளி ஆகியவற்றுக்கான திறனாய்வுப் போட்டிகள் முட்கொம்பன் தமிழ் ஒளிர் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. (பா)

# இனிவரும் காலங்களில் கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்படும்

## – பொ.ஐ.மு. ஊடகப் பேச்சாளர் சரத்அமுனுகம

(கொழும்பு)

இனிவரும் காலங்களில் கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்படும் என பொதுசன ஐக்கிய முன்னணியின் ஊடகவியற் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைப்பது கட்டாயமானது என்றும் எந்தவொரு இணக்கப்பாடும் சிறிலங்காவின் அரசியல்யாப்புக் கட்டமைப்புக்கு உட்பட்டதாக வேண்டும் என்றும் அவர் கூறுகின்றார்.

இறுதித் தீர்வைக் காணப்படும் வரையும் இடைக்கால நிர்வாகம் ஒன்று அவசியம் என்றும் அரசாங்கம் நாட்டின் பாதுகாப்பு இறைமையைப் புறக்கணித்துவிட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார் இனிவரும் காலங்களில் கிழக்கு மாகாணத்திலே பாதுகாப்புக்குப்பெரும்அச்சுறுத்தல் ஏற்படும் என்றும் கூறியுள்ளார்.


## கண்ணீர் அஞ்சலி

27-6-2003இல் சிவபதமடைந்த இலங்கை வங்கி ஊழியர்

### அமரர் .இராசா - குணசிங்கம்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி, இவரின் பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"கண்ணுக்குள் உன் தோற்றம்
காலமெல்லாம் நிலைத்திருக்க
காலடியில் கண்ணீரை - கடவுளுக்காய்
காணிக்கை தருகின்றோம்".

இலங்கை வங்கி ஊழியர்கள்,
கிளிநொச்சி.

(3409)



## சுகாதார போசன நலன் ஓம்பு அமைச்சின் பதவிகளின் பொருட்டு பயிலுனர்களை ஆட்சேர்த்துக்கொள்ளல்-2003

சுகாதார சேவையின், ஆய்வு கூட தொழில் நுட்பவியலாளர், பாடசாலை பற்சிகிச்சையாளர், பௌதீக சிகிச்சையாளர், பு,ச்சியலாளர், சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர், மின்சார இருதயத் துடிப்பு பதிவாளர், மின்சார மூளை இயக்கப் பதிவாளர், எக்ஸ் கதிராளர், பொதுசன சுகாதார இரசாயனவியலாளர், தொழில் சிகிச்சையாளர், ஆகிய பதவிகளுக்குப் பின்வரும்தகைமை உடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவுத்திகதி 2003-07-21.

(01) க.பொ.த.உயர்தர விஞ்ஞான , கணித பிரிவில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களிலேனும் சித்திபெற்றிருத்தல்.

(02) 31.12.2002ல் வயது எல்லை 18 மேல் 30க்கு உட்பட்டவர்.

(03) இலங்கைப் பிரசையாக இருத்தல்

இவற்றினை விட மேலதிகமாக கல்வித் தகைமை, பயிற்சி காலம் விண்ணப்பிக்கும் முறை என்பன தொடர்பான விபரங்களை 2003ம் ஆண்டு யூன் 20 திகதி 1294 ம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தக மானியின் பகுதி 1ன் இரண்டாம் பந்தியைப் பார்வையிடுதலுடன் ஏனைய தகவல்களையும் விண்ணப்பிக்கும் முறையையும் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவில் பார்வையிடலாம் தகைமையுடைவர்கள் ரூபா 50 பெறுமதியான முத்திரையுடன் மா.சு.சே.பி.ப பணிமனைக்கு சமுகம் அளித்து உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

க. நாகேசுபரன்,
நிர்வாக உத்தியோகத்தர்,
மா.சு.சே.பி.பணிப்பாளருக்காக
முல்லைத்தீவு.

(சி-8191)



## 31ஆம் நாள் நினைவில்

28-06-2003



### கிட்ணசாமி – சங்கர்

உள்ளத்தால் மென்மையானவனே
உன் இழப்பில் எம் இதயம்
வாடிப்போனதையா
நான்கு வரிகளில் முடிக்கலாமா
உன் பெயரை - எம்
நரம்பை கொண்டு தைத்தாலும்
நகராதையா உன் நினைவு

மு. சறோஜா,(மைத்துனி),
கணக்காளர்,
நிடோநிறுவனம்,
தலைமைப் பணிமனை
கிளிநொச்சி

(3408)



## மல்லாவி-புளியங்குளம் பேருந்துப் பணியில் ஒருநேரப்பணி உயிலங்குளம் -மல்லாவி- புளியங்குளம் பணியாக மாற்றம்

01.07.2003 ஆம் நாளிலிருந்து மாற்றப்பட்டபணி பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு

உயிலங்குளம் -புளியங்குளம்

| உயிலங்குளம் | துணுக்காய் | மல்லாவி | பாலையடி | மாங்குளம் | புளியங்குளம் |
|---|---|---|---|---|---|
| காலை 07.30 | 8.00 | 8.30-9.00 | 9.30 | 10.30 | 11.15 |

புளியங்குளம் - உயிலங்குளம்

| புளியங்குளம் | மாங்குளம் | பாலையடி | மல்லாவி | துணுக்காய் | உயிலங்குளம் |
|---|---|---|---|---|---|
| பகல் 12.00 | 12.45 | 01.45 | 2.15 - 2.30 | 3.00 | 3.30 |

குறிப்பு:- 1) மல்லாவி பேருந்து நிலையத்தில் பேருந்துக்கள் வந்தடையும் நேரமும், புறப்படும் நேரமும் தரப்பட்டுள்ளது.
2) மாங்குளத்தில் 15 மணித்துளிகள் நிற்கும்.

(சி-8190)

முகாமையாளர்,
பயணியர்போக்குவரவுவளர்தி,
வழியனுமதிப்பணியகம்.

# காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி பாகிஸ்தானுக்கு அதை விட்டுத்தர முடியாது

## - இந்திய சனாதிபதி அப்துல் கலாம் திட்டவட்டமாக அறிவிப்பு

**காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி அதை பாகிஸ்தானுக்கு விட்டுத்தர முடியாது என இந்திய சனாதிபதி அப்துல் கலாம் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். காஷ்மீருக்கு விஜயம் செய்துள்ள அவர் அங்கு இதனைத் தெரிவித்தார்.**



பயங்கரவாதத்தை எதிர்கொள்ள தொலைநோக்கு கொள்கைகளை வகுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேநேரம் இதற்கு மூல காரணமாகவுள்ள பிரச்சினைகளைக் களைய ஒட்டுமொத்த நடவடிக்கை தேவை என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் ஜம்மு பல்கலைக்கழகத்தில் 11ஆவது பட்டமளிப்பு விழாவில் பேசுகையிலேயே இதனைக் கூறிய அவர்,

சிலநாடுகள் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைத் தூண்டி வருவதாகக் கூறினார்.

கொள்கை வேறுபாடு மதத் தீவிரவாதம் பாரபட்சம் காட்டுவது அமைப்புக்களுக்கிடையேயும் நாடுகளுக்கிடையேயுமுள்ள பகையுணர்வு என்பன பயங்கரவாதத்தை உருவாக்குகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

# பாக்தாத்தில் அமெ. இலக்குகள் மீது தாக்கு; அமெ. படை அதிகாரி பலி; 8பேர் காயம்

பாக்தாத்திலுள்ள அமெரிக்க இலக்குகள் மீது தாக்குதல்கள் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டுள்ளன.

தலைநகரின் ஒரு பகுதியில் இடம் பெற்ற தாக்குதலில் விசேட நடவடிக்கைப்பிரிவு அதிகாரியொருவர் கொல்லப்பட்டதுடன் 08பேர் காயமடைந்துள்ளதாக அமெரிக்க இராணுவத்தினர் கூறியுள்ளனர்.

மற்றுமோர் பகுதியில் அமெரிக்க வாகனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் ஈராக்கிய சாரதியொருவர் கொல்லப்பட்டதுடன் இரண்டு அமெரிக்க வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

## - ஈராக் சுத்திகரிப்பு நிலையத்தில் -

# எண்ணெய் விநியோகக்குழாயில் வெடி விபத்தால் பெரும் தீ.

ஈராக்கில் பல்யூரா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து கீர்த்துஸ் துறைமுகத்திற்கு கொண்டு வரப்படும் எணணெய்க் குழாயில் நேற்று முன்தினம் பெரும் வெடி விபத்து ஏற்பட்டதால், தீ கொழுந்து விட்டு எரிவதாகக் கூறப்படுகின்றது.

இதனால் சுத்திகரிப்பு நிலையத்திற்குச் செல்ல வேண்டிய மசகு எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மின்சார உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்தைக் கட்டுப்படுத்த அமெரிக்க இராணுவத்தினர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஈராக்கில் ஐந்து நாட்களில் இதுவரை நான்கு எண்ணெய் விநியோகக் குழாய்களில் வெடிப்பு ஏற்பட்டு தீவிபத்து ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஈராக்கில் வெடிப்பினால் சேதமடைந்த எண்ணெய் விநியோகக் குழாய்

# தீபெத் பிரச்சினையில் சீனாவுக்கு இந்தியா வாக்குறுதி எதையும் வழங்கவில்லை

## - இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவிப்பு

தீபெத்து பிரச்சினையில் இந்தியா, சீனாவுக்கு வாக்குறுதி எதையும் அறிக்கவில்லையென பிரதமர் வாஜ்பாய் கூறியுள்ளார்.

சீனாவுக்கு மேற்கொண்ட 06 நாட்கள் அரசமுறை பயண முடிவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

தீபெத் பிரச்சினையில் பல ஆண்டு காலமாக இந்தியா எதைச் சொல்லி வந்ததோ அதைத்தான் இப்போதும் சொல்லி இருக்கின்றது என்றும் புதிதாக ஏதுமில்லை என்றும் கூறியுள்ளார்.

இந்தியா-சீனா இடையே எல்லைப்புற வர்த்தகத்தைத் திறப்பது பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் எனும் அச்சம் அடிப்படையற்றது என்றும் கூறியுள்ள வாஜ்பாய்,

சீனாவுடன் இருதரப்பு விடயங்கள் மட்டுமன்றி வட கொரியா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் நிகழ்ச்சிப் போக்குகள் குறித்த சர்வதேசப் பிரச்சினைகள் பற்றியும் மனம் திறந்து விவாதம் நடத்தியதாகவும் அவர் கூறியுள்ளார்.

பல்வேறு துறைகளில் இந்தியாவும் சீனாவும் இணைந்து செயற்பட இருப்பது நல்ல தொடக்கம் என்றும்

இரு நாடுகளிற்கிடையே நீண்ட காலமாக உள்ள எல்லைப் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்கு எடுத்திருக்கும் புதிய முயற்சி இந்தப் பிரச்சினைக்கான தீர்வை துரிதப்படுத்தும் என்றும் வாஜ்பாய் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நடைமுறையிலுள்ள எல்லைக்கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைதியைத் தொடர்ந்து பராமரிக்க ஒப்புக்கொள்ளப்பட்டதாகவும்,

பொருளாதார நிபுணர்கள் மற்றும் அதிகாரிகளைக் கொண்ட ஆய்வுக்குழு வலுமிக்க பொருளாதாரப் பகுதிகளை அடையாளம் காண்பதோடு இருதரப்பு வர்த்தகம், முதலீடுகள் அதிகரிப்பு ஆகியவை குறித்தும் இருநாடுகளின் அரசுகளுக்குப் பரிந்துரை அளிக்கும் என்றும் கூறியுள்ளார்.

## - அயோத்தியில் ராமர் கோயில் கட்ட சட்டம் -

# விஸ்வஹிந்துப் பரிஷத்தின் கோரிக்கை

# பாரதீய ஜனதா கட்சியால் நிராகரிப்பு

அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கு சட்டம் இயற்ற வேண்டும் எனும் விஸ்வஹிந்து பரிஷத்தின் கோரிக்கையை பா.ஜ. கட்சித் தலைவர் வெங்கையா நாயுடு நிராகரித்துள்ளார்.

நேற்று முன்தினம் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

இத்தகைய சட்டம் இயற்றுவதற்கு கூட்டணிக் கட்சிகளுக்கு நிர்ப்பந்தம் அளிக்க பா.ஜ. கட்சி விரும்பவில்லை என்று கூறியுள்ளார்.

தேசிய சனநாயக கூட்டணியின் பொதுத் திட்டத்திலிருந்து பா.ஜ. கட்சி விலகிச் செல்ல விரும்பவில்லை என்றும் கூறிய அவர்,

இந்த விடயத்தில் பா.ஜ. கட்சியின் நிலைமையை விஸ்வஹிந்துப்பரிஷத் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அயோத்திப் பிரச்சினைக்கு தீர்வுகாண காஞ்சி சங்கராச்சாரியார் மேற்கொண்டுள்ள முயற்சிகளை தாம் வரவேற்பதாகவும்,

அயோத்திப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட அனைவருடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும். எவரையும் விலக்கி வைக்கும் பேச்சுக்கே இடமில்லை என்றும் வெங்கையா நாயுடு கூறியுள்ளார்.



மெக்சிக்கோவில் நகரப்பொலிசாருக்கும் உள்ளூர் வாசிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் எரியும் வாகனமும் கலகமடக்கும் வாகனமும்

# பலஸ்தீனத்தைப் போல் காஷ்மீரிலும் அமெரிக்கா தலையிடவேண்டும்

## - பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் கோரிக்கை

பலஸ்தீனப் பிரச்சினையைப் போல காஷ்மீர் பிரச்சினையிலும் அமெரிக்கா தலையிட வேண்டுமென பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் கோரிக்கை விடுத்துள்ளார்.

பலஸ்தீனப் பிரச்சினையில் அமெரிக்கா சமரசம் செய்வது போல காஷ்மீர் பிரச்சினையிலும் தலையிட வேண்டுமென்று முஷாரப் வலியுறுத்தியுள்ளார்.

ஆனால் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் திட்ட வட்டமாக மறுப்புத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள முஷாரப், வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

இஸ்ரேல், பலஸ்தீனியிடையே சமரச முயற்சியில் ஈடுபட்டிருப்பது போல், காஷ்மீர் பிரச்சினையிலும் அமெரிக்கா மத்தியஸ்தம் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளதுடன், இதற்கான ஒரு சமரசத் திட்டத்தை அமெரிக்கா தயாரித்து அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பயங்கரவாதத்தை எதிர்த்து பாகிஸ்தான் தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாகவும், பாகிஸ்தான் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த பயங்கரவாதம் ஒழிக்கப்படுவது அவசியம் என்றும் முஷாரப் குறிப்பிட்டுள்ளார்.

முஷாரப்பின் சமரசத் திட்டத்தை இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந் சிங்ஹா ஏற்கனவே நிராகரித்துள்ள நிலையில், சீனாவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் வாஜ்பாயும், காஷ்மீர் பிரச்சினையில் மூன்றாவது தரப்பின் தலையீட்டை ஏற்க முடியாது என்று திட்ட வட்டமாக மறுப்புத் தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவுக்கெதிராக கொரியா யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட 53ஆவது ஆண்டைக் குறிக்கும் வகையில் பியன்யங்கில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்

# செவ்வாய்க் கிரகத்தின் குணங்களுடன் காணப்படும்

# அந்தாட்டிக்கா-தென்துருவப்பகுதி

தென்துருவத்தில் உறைந்து நிற்கும் பனி மலைகள்.... அவை மிதக்கும் கடல்.... அதனுள் நீந்தித் திரியும் திமிங் கலங்கள்..... மிதக்கும் கடல் மீது வீற்றிருக்கும் பென்குயின்கள்.... இது தான் அந்தாட்டிக்கா.

இந்த அந்தாட்டிக்காவின் பனிமலைகள் உருகத் தொடங்கி விட்டனவா.....? மேலும் உறையும் சாத்தியங்கள் உண்டா.... என விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றார்கள்.

கடல் மீது மிதக்கும் அந்தப் பனிமலைகள் நாளுக்கு நாள் சிறிதாகி வருகின்றதா..... பெரிதாகி வருகின்றனவா.... எனும் ஆராய்ச்சியிலும் விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றார்கள்

மிக்முர்டோ சவுண்டைத் (பள்ளத் தாக்கு) தாண்டி மாபெரும் மிதக்கும் பனிமலையைக் கடக்கும் போது ஒரு மாநிலம் அளவுக்கு அது பெரி தாக இருக்கும்.

திடீரென்று பாறைகள் உடைந்து மிதக்கும் பாறைகள் உருவாவதற்கு என்ன காரணம்...., அதன் உள்ளுக்குள்ளேயே நடைபெற்று வரும் குழப்பங்களின் விளைவா.... அல்லது உலகம் முழுவதும் ஏற்பட்டு வரும் அதிக வெப்பமாகும் தன்மையினால் பனிப்பாறைகள் உடைகின்றனவா...? 2002ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வல்லுனர்களின் அறிக்கையின் படி 1998 ஆம் ஆண்டிற்குப் பின்பு 1999 ஆம் ஆண்டு இரண்டாவது மிக வெப்பமான ஆண்டாக இருந்தது என்று கூறப்பட்டுள்ளது.

இதனால் அந்தாட்டிக்காவில் உள்ள எல்லாப் பனிப் பாறைகளின் எதிர்காலமே கேள்விக்குறியாக இருக்கும். இந்தப் பனிப்பாறைகளில் உலகின் தூய நீரில் 75சதவிகிதம் உள்ளது. இது எந்த நேரமும் விரைவில் உருகக் கூடும் அவ்வாறு அந்தாட்டிக்கா உருகும் போது பம்பாயிலிருந்து பாஸ்டன் வரை தாழ்வான கடலோரப் பகுதிகளில் 60 மீற்றர் அளவிற்கு கடல் மட்டம் உயர்ந்து பெரும் சேதங்களை ஏற்படுத்தும்.

கடந்த ஓராண்டு காலத்திற்குள் மிகப் பெரிய பனிப் பாறை தனியாக உடைந்து பிரிந்ததை விஞ்ஞானிகள் கவனித்துள்ளனர்.

அமெரிக்காவின் சிகாகோ மாநிலம், இல்லி னாய்ஸ் பல்கலைக் கழக பூமி விஞ்ஞானி பீட்டர் டோரன் மனித குலத்தின் பாதுகாப்புக்கு ஒரு பகுதியாக இந்த தீபகற்பம் விளங்குகின்றது என்று கூறியுள்ளார். இன்று எழுந்துள்ள மிக முக்கியமான கேள்வி அந்தாட்டிக்கா வெப்பமடைந்து வருகின்றதா? மேலும் குளிந்து வருகின்றதா? என்பது தான்.

இதற்கு விஞ்ஞானிகளால் தீர்மானமான பதில் அளிக்க முடியவில்லை.

ஏனெனில் இந்தக் கண்டம் மிகப் பெரியதாக உள்ளது. அளவிடப் பட்டுள்ள பகுதி மிகச் சிறியதாகவே இருப்பதால் முழுமையாகக் கணிக்க முடியவில்லை. ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு நீண்ட காலப் பதிவுகள் எதுவுமில்லை. இப்பகுதியில் ஆய்வு நடத்துவது மிகவும் ஆபத்தானது. உணவு பெற்றுக்கொள்வது கடினமானது.

உணவை உலங்கு வானூர்தி மூலம் பெற்றுக்கொள்ள முடிந்த போதும், வானூர்தி விபத்துக்குள்ளாவது.

இதனால் தான் அந்தாட்டிக்கா பற்றி மிகக் குறைவாகவே அறியப் பட்டுள்ளது.

இது பூமியை விட செவ்வாயின் குணங்களையே அதிகமாகப் பெற்றுள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளார்கள்.

அத்துடன் மிக்முர்டோ பள்ளத் தாக்குகள் தான் அதிகளவில் செவ்வாய் குணங்களைப் பெற்றுள்ளது.

இது பனிக்கட்டி மூடிய ஏரிகளும், பாறைகளும் நிரம்பிய பகுதியாகும் . இங்கு மீன்களோ, ஈக்களோ, கொசுக்களோ வேறு உயிரினங்களோ காணப்படவில்லை. இதை "இறந்த பள்ளத்தாக்கு" என கண்டு பிடித்தார் ராபர்ட் பால்சன் ஸ்காட். 1903 ஆம் ஆண்டு இவர் டைலர் பள்ளத்தாக்கை முதன் முதலில் கண்டுபிடித்த போது இந்தக் கருத்தை வெளியிட்டார்.

எனினும் சில நுண்ணிய புழுவகைகள் இங்கு காணப் படுவதாகவும் இவை பக்ரீரியாவை உண்கின்றன என்று கூறப்படுகின்றது.

இவை மிகவும் குளிர்ச்சியானவை இங்கு ஆண்டின் மிகக் குறைந்த வெப்பநிலை 15 பாகையாக உள்ளது.

இதில் ஓடும் நீரோடைகள் ஆறு மாதங்களின் பின்னர் உறைந்து விடுகின்றன.

இப்பகுதி சுமார் 3000 ஆண்டுகளாக வெளிஉலகத்தவர் வராத பகுதியாகவே இருந்து வருகின்றது.

உலர் பள்ளத்தாக்கு ஏரிகளில் விஞ்ஞானிகள் 1968 முதல் 2000 வரை சுற்றுச் சூழல் சோதனைகளையே நடத்தியுள்ளனர்.

உலர் பள்ளத்தாக்கு ஏரிகளில் "லேக்விடா" மிகப் பெரியது. இதில் பக்ரீரியாக்கள் மட்டுமே காணப் படுகின்றன.

இங்கு கடந்த ஆண்டு டிசம்பர் 2001 முதல் ஜனவரி 2002 வரை வெப்பநிலை திடீரென்று அதிகரித்தது. அதனால் ஏரி அளவுகள் குறைந்தன.

சிறிது காலம் நிலமை மோசமாக இருந்தது. உருகிய தண்ணீர்ப னிப் பாறைகளில் ஓடி பனி அருவிகளை ஏற்படுத்தியது.

இதனால் ஆனிக்ஸ் நதி முழு வேகத்துடன் ஓடியது.

இந்த திடீர் மாற்றத்திற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை என்கின்றனர் விஞ்ஞானிகள்.

இது இப்பகுதியில் ஏற்பட்ட மாற்றமா... உலகம் முழுவதும் ஏற்பட்ட மாற்றத்தின் ஒரு பகுதியா... என்று தெரியவில்லை என்கின்றார் ஓவறியோ பல்கலைக்கழக, புவிரசாயன அறிஞர் பெர்ரிலியான்ஸ்.

இந்த ஏரிகள் 15 ஆயிரம் ஆண்டுகள் பழமையானவை என்று சில விஞ்ஞானிகள் கூறியுள்ளார்கள்.

# ஜப்பான் பனிபடர்ந்த மலையில் அசையாமல் கிடக்கும் முயலினம்

ஜப்பானில் உள்ள குளிர் மண்டிய பனிபடர்ந்த ஒக்கைதோ மலைத்தொடரில் துள்ளிக் குதிக்கும் வெள்ளை முயல் இனமொன்று வாழ்கின்றது.

அடுக்கடுக்காக இருக்கும் பனிப்பாளங்களுக்கிடையில் இது அசையாமல் படுத்திருப்பதால் பனியை உருட்டிப் பிடித்த உருண்டை போலவே இருக்கும்.

இதனுடைய வெள்ளை நிறமும், அசையாமல் படுத்திருக்கும் நிலையும், கழுகு, நரி போன்ற பிராணிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளப் பெரிதும் உதவுகின்றது.

இந்த ஒக்கியோ மலைத் தொடரில் வாழும் இந்த முயலின் அறிவியல் பெயர் லெபஸ் டிமிடஸ் ஐநு **(Lepus timidus ainu)** என்பதாகும்.

இப் பெயரை விட நீலமுயல், வடதுருவ முயல், வெள்ளை முயல், மலைமுயல், கிரீன்லாந்து முயல் எனவும் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

பனிக்காலம் வரை சாம்பல் வண்ணமும், மரவண்ணமும் கலந்த நிறமாயிருக்கும் இந்த முயலின் மேற்புறம், செப்ரெம்பர் பிறந்ததும் வெள்ளை நிறமாக மாறிவிடுகின்றது.


அத்துடன் தோலின் மேல் அடுக்கடுக்காக இருக்கும் அடர்த்தியான மெல்லிய ரோமம் அதைக் குளிர் தாக்காமல் காக்கின்றது. 30 பாகை செல்சியஸ் இருக்கும் கடுமையான குளிரையும் இந்த முயல் தாங்கிக் கொள்வதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

கொடிய விலங்குகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அது மணிக்கணக்காக அசையாமல் படுத்திருப்பதாகவும், தசை நார்கள் இறுகி விடாமல் இருப்பதற்காகவும் அவ்வப்போது உடம்பை நீட்டிச் சோம்பல் முறித்துக் கொள்வதாகவும் கூறப்படுகின்றது.

எல்லா முயல் இனங்களிலும் இந்த வெள்ளை முயல் இனத்தின் பின்னங்கால்கள் தான் உறுதியானவை.

இந்த முயல் தூங்கும் நேரம் மிகக் குறைவு ஆழ்ந்த உறக்கம் என்பதே இந்த முயல் இனத்திற்குக் கிடையாது என்றும் கூறப்படுகின்றது.

# பேனா மூலம் புகைப்படம்



புகைப்படம் எடுப்பதற்கு கமராவுடன் அலைந்த காலம் மாறி, பேனையுடன் செல்பவர்கள் படம் எடுக்கும் காலம் உருவாகிவிட்டது.

பேனைபோல் இருக்கும் கமரா மூலம் சிறந்த படங்களை எடுக்க முடியும் என புதிய பேனா போன்ற அமைப்பில் கமரா உலக சந்தைக்கு வந்துள்ளது. அதன் படமே இங்கு.

# பீடைநாசினிகள் மரணங்களுக்கு மறைமுகமான காரணிகளா?

பீடை நாசினிகள் மனிதனின் நோய் எதிர்ப்பு சக்தியை இழக்கச் செய்து மரணங்களை ஏற்படுத்துவதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

பீடைநாசினிகள் ஏற்படுத்தும் மரணங்களின் எண்ணிக்கைகள் குறைவாகவே அறிவிக்கப்படுகின்றது. பீடைநாசினிகள் மனிதனின் நோய் எதிர்ப்பு சக்தியை சீர்குலைப்பதனால் ஏற்படும் மரணங்கள் பீடை நாசினியால் ஏற்படும் மரணங்கள் என அறிவிக்கப்படாமையே இதற்கான காரணமாகும்.

குறிப்பாக பண்ணைகளிலும் வளர்முக நாடுகளிலும் புற்றுநோய், தொற்று நோய்கள் மற்றும் ஏனைய நோய்களால் ஏற்படும் மரணங்கள் மனித உடல் நோயை எதிர்க்கும் சக்தியை இழப்பதனாலேயே ஏற்படுகின்றன.

மிருகங்களின் நோய் எதிர்ப்பு சக்தியை பீடைநாசினிகள் சீர்குலைப்பதாக விஞ்ஞான ரீதியாக நடத்தப்பட்ட பல பரிசோதனையில் இருந்து தெரியவந்துள்ளது.

மனிதரில் பீடை நாசினிகள் ஏற்படுத்தும் தாக்கம் இன்னதுதான் என சரியாகத் தெரியாத போதிலும் கனடா, ரஷ்யா போன்ற நாடுகளில் நடாத்தப்பட்ட பரிசோதனைகளில் மிருகங்களில் ஏற்பட்டதைப் போன்று பீடை நாசினிகளால் மனிதரிலும் நோய் எதிர்ப்புச் சக்தி அற்றுப் போவது அவதானிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் தொற்று நோயினால் கூடுதலாகப் பாதிக்கப்பட்டிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

மோல்டோவா நாட்டில விவசாயப் பகுதிகளில் வாழும் 80 வீதமான சிறுவர்களின் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்திருந்தது அவதானிக்கப்பட்டது.

சாதாரண சிறுவர்களுடன் ஒப்பிடும்போது இச்சிறுவர்கள் சமிபாட்டு தொற்றல் நோய்களால் மூன்று மடங்கு கூடுதலாகவும் சுவாசத் தொற்று நோய்களால் 2-5மடங்கு கூடுதலாகவும் பாதிக்கப்பட்டனர்.

புற்றுநோய் கலங்களிலிருந்து ஏனைய கலங்களைப் பாதுகாக்கும் சக்தியை பீடை நாசினிகள் பாதிப்பதனால் ஹொட்ஜ்கின் நோய். மெலனோமா போன்ற புற்று நோய்களால் பாதிக்கப்படும் தன்மை அதிகரித்துள்ளதற்குச் சான்றுகள் உள்ளன.

மருத்துவ வசதி குறைந்த அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் வசிப்பவர்களும் குழந்தைகளும் வயோதிபர்களும் நீண்ட காலமாக நோய் வாய்ப்பட்டிருப்பவர்களுமே கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்விடயத்தில் கூடுதலான ஆராய்ச்சிகள் தேவைப்படுவதுடன் விவசாய இரசாயன உற்பத்தியாளர்கள் ஆபத்தில்லாத பீடை நாசினிகளை உற்பத்தி செய்வதன் மூலமே மேற்படி மரணங்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம். (ஜெ)

# ஓநாய்களின் செய்திப் பரிமாற்றம்...

ஸ்பெயின் நாட்டு விஞ்ஞானிகள் ஓநாயைப் பற்றி சில வினோதமான உண்மைகளைக் கண்டறிந்துள்ளார்கள்.

ஓநாய் சிலசமயம் காதை மடித்துக் கொள்ளும், சில சமயம் நீட்டிக் கொள்ளும், சில சமயம் பல்லைக் காட்டி உறுமும் இப்படியான செய்கைகளுக்கு உள்ளர்த்தம் இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

ஐரோப்பாவிலுள்ள ஓநாய் சரணாலயங்களில் ஓநாய்களின் பழக்க வழக்கங்களையெல்லாம் கவனித்து ஆராய்ந்த விஞ்ஞானிகள்.

ஏதாவது ஒரு ஓநாய் தன் வாலை முதுகு மட்டத்திற்கு மேல் அதாவது மேல் நோக்கி தூக்குகின்றது என்றால், அதுதான் அந்தக் குழுவின் தலைமை ஓநாய் மற்றவை வாலை நேராய் மட்டுமே நீட்டலாம்.

அதேபோன்று ஓநாய் ஒன்று தன் வாலைத் தூக்கினால் தலைவனை எதிர்த்துப் போர் கொடி உயர்ந்துகின்றது என்று அர்த்தம்.

இவ்வாறு ஓநாய்கள் தமது அசைவுகளின் மூலமே தமது தகவல்களை வெளிப்படுத்தி விடுவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

# தூரநோக்கு சாதனத்துடன் டிஜிட்டல் கமரா



விதவிதமான டிஜிட்டல் கமராக்கள் உலக சந்தையில் விற்பனைக்கு வந்து கொண்டிருக்கும் வேளையில், இவற்றையெல்லாம் விஞ்சும் வகையில் பைனாகுலருடனான டிஜிட்டல் கமரா ஒன்று புதிதாக சந்தைக்கு வந்துள்ளது.

பைனாகுலரின் உதவியுடன் தொலைவிலுள்ள கட்சிகளை மிகத்துல்லியமாகப் பார்ப்பதுடன் அக்காட்சிகளை படம் பிடிக்கவும் முடியும்.

இப்படங்களை கம்ப்யூட்டரின் உதவியுடன் டவுன்லோட் செய்து பார்வையிடலாம்.

இந்த டிஜிட்டல் கமரா இலங்கையில் அறிமுகப்படுத்தவும் உள்ளது.

# பால் வெளியில் சூரியன் பெரிதல்ல சாதாரண விண்மீனே அது

மில்கிவே **(The milky way)** என அழைக்கப்படும் பால் வீதி என்பது சுமார் 20,000 கோடி விண் மீன்களும், ஒளி முகில்களும், இறந்து போன விண் மீன்களும் இருப்பது வான்மண்டல அமைப்பு ஆகும்.

நீள்வட்டமாக அமைந்த பால் வீதியில் மத்திய பகுதி பெருத்தும் இரு முனைகளும் கூம்பு வடிவமாகவும் இருக்கின்றன. அதன் ஒரு முனையிலிருந்து மறுமுனை வரையிலான தூரம் ஒரு இலட்சம் ஒளியாண்டு ஆகும்.

பால் வீதியின் நடுப்பகுதியில் ஏராளமான விண்மீன்கள் அடர்த்தியாக இடம் பெற்றுள்ளன. மையத்திலுள்ள விண்மீன்கள் மிகப் பழமையானவை. அதைச் சுற்றி புதிய இளைய விண்மீன்கள் மாபெரும் தட்டுப் போல் அமைந்துள்ளன.

பால் வீதியிலுள்ள மீன்களில் ஒன்று சூரியன். அது அப்படி ஒன்றும் பெரியது அல்ல. மிகவும் சாதாரணமான சராசரி விண்மீன் ஆகும்.

பால் வீதியின் ஓரப்பகுதியில் இருக்கும் விண்மீன்கள் மையப் பகுதியைச் சுற்றிச் சுழல்கின்றன.. உண்மையில் இந்த விண்மீன் மண்டலத்தின் எல்லாப் பகுதிகளும் சுற்றிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் ஒரே வேகத்தில் அல்ல. மையப்பகுதியின் ஈர்ப்பாற்றல் வலிமைமிக்கது. ஓரத்திற்குப் போகும் போது அது குறைந்து கொண்டே வருகின்றது.

எனவே பால் வீதியின் ஓரப் பகுதிகள் சற்று மெதுவாகவே சுற்றுகின்றன. விண்மீன்களுக்கு இடையிலுள்ள வெட்டவெளியில் தூசும். வாயுக்களும் காந்தப் புலன் களும். அணுவினும் சிறிய விண்வெளித் துகள்களும் இருக்கின்றன. பால்வீதியில் உள்ள வாயுக்களையும் தூசையும் கொண்டு மேலும் 2000 கோடி விண் மீன்களை உருவாக்க முடியும்.

# இறைச்சி வகைகளை மட்டும் உண்ணும் பிரானா வகை மீனினம்

மீன்களில் மாமிசம் மட்டும் உண்ணும் மீனினமும் இருக்கின்றது. பிரானா என்பது அந்த மீன் வகையின் பெயராகும்.

பிரானா **(Piraha)** மீனினம் இறைச்சி வகை மட்டுமே உணவாக உண்கின்றன. இரத்த வாடை வந்தால் போதும் கூட்டம் கூட்டமாகச் சென்று எந்தப் பிராணியாக இருந்தாலும் நிமிஷ நேரத்தில் சாப்பிட்டு முடித்து விடுகின்றன என ஆராய்ச்சிகள் மூலம் வெளிப்பட்டுள்ளது.

# யாழ். பொங்குதமிழ் நிகழ்வில்...





















# அரியாலை நெடுங்குளம் சந்திப்பகுதியில் எலும்புக்கூடு, எலும்புகள் கண்டெடுப்பு

## - மேலும் இருக்கலாம் என்றும் ஐயம்

**அரியாலைப் பகுதியில் கண்டி வீதி, நெடுங்குளச் சந்திக்கு அருகாமையில் எலும்புக்கூடுகளும், எச்சங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.**

"ஹலோ ட்ரஸ்ற்" கண்ணிவெடி அகற்றும் குழுவினர், அரியாலைப் பகுதியிலுள்ள கண்டிவீதியின் இரு பக்கமும் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதே அப்பகுதியில் ஒரு முழுமையான நிலையில் மனித எலும்புக் கூடொன்றும் வேறு சில மனித எலும்புக் கூட்டின் எச்சங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதனைக் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டவர்கள் அப்பகுதிப் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு தெரிவித்தனர்.

பொலிசார் உடனடியாக யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி. விக்னராஜாவிற்கு அறிவித்ததையடுத்து யாழ். மாவட்ட நீதிபதி சம்பவம் நடந்த இடத்திற்கு நேற்று முன்தினம் காலை 9.00 மணியளவில் சென்று எலும்புக் கூடுகளும், எச்சங்களும் காணப்பட்டப் பிரதேசத்தைப் பார்வையிட்டுள்ளார்.

அத்துடன் அப்பகுதியிலுள்ள கண்ணிவெடிகளை விரைவாக அகற்றி வேறு எச்சங்கள் ஏதும் இருப்பின் அவற்றையும் மீட்கும்படி அப்பகுதி பொலிஸ் அதிகாரிக்கு யாழ். நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

எலும்புக்கூடு மற்றும் எலும்புக் கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்ட பின்னர், அவை உரிய தடயவியல் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாகாண மட்டப் போட்டிக்கு சென்றும் கிளி. மாணவர்கள் பங்கேற்க முடியாநிலை

## - ஆளடையாள அட்டை இல்லாமை காரணம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக வவுனியா சென்ற விளையாட்டு வீரர்கள் தம்மை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அஞ்சல் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற ஆள் அறிமுக அட்டைகள் இல்லாத காரணத்தால் போட்டிகளில் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் யுத்த நிலைமைகள் காரணமாக தமது திறமைகளை வெளிக்காட்ட முடியாதவாறு பாதிக்கப்பட்டிருந்த இம்மாணவர்கள் தற்போதைய சூழலில் தமது திறமைகளை வெளிக்காட்டுவதற்கு தம்மை தயார் படுத்திப் போட்டிக்குச் சென்ற போது அடையாள அட்டைகள் இல்லாத காரணத்தால் மேற்படி போட்டிகளில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பம் இறுதி நேரத்தில் கைநழுவிச் சென்று விட்டது.

பல்வேறுபட்ட கஷ்ட நிலைகளிலும் தமது சொந்தப் பணத்தைச் செலவிட்டு அலைந்தும் இவர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாமற் போனமைக்கு பாடசாலைகளின் அதிபர்கள் விளையாட்டு அதிகாரிகளின் அசமந்தப்போக்கே காரணம் என பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படி போட்டிகளில் போட்டியாளர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் மற்றும் அவர்கள் சமர்ப்பிக்க வேண்டிய முக்கிய ஆவணங்கள் அடங்கிய சுற்றறிக்கைகள் கல்வித் திணைக் களத்தால் அனைத்து பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட தினத்தில் இருந்து இரண்டு நாட்களுக்கு முன்னதாக மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளை நடத்தப்பட்டன எனவும் இவ்வாறு இரண்டு நாட்களுக்கு முன்னர் ஒரு போட்டியில் கலந்து விட்டு உடனடியாக மாகாண மட்டப் போட்டியில் எவ்வாறு திறமையாக விளையாட முடியும், எனவும் அவர்கள் கேட்கின்றனர். (லோ)

# வவு. மாவட்ட மாணவர்களுக்கு சின்னமுத்து தடுப்பூசி ஏற்றல்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு சின்னமுத்து தடுப்பூசி மருந்தேற்றல் நிகழ்வு நடைபெற்று வருகின்றது.

வவுனியா மாவட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம்-5 தொடக்கம் தரம்-11 வரையான வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வவுனியா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் சின்னமுத்து தடுப்பூசி மருந்து ஏற்றப்படுகின்றது.

வவுனியா மாவட்டத்தில் சின்னமுத்து நோயினை இல்லாது ஒழிக்கும் நோக்கில் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் பாடசாலை மாணவர்களுக்குத் தடுப்பூசி மருந்தேற்றப்பட்டு வருவதாக வவுனியா பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு. கிரிதரன் அவர்கள் தெரிவித்துள்ளார். (10)

# முன்பள்ளித் திறப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய ஒழுங்கமைப்பில் பூநகரி அபிவிருத்திக் கழகத்தால் செயற்படுத்தப்படும் தனபால் முன்பள்ளித் திறப்பு விழாவும், விளையாட்டு விழாவும் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. (34)

# இலவச ஆங்கில வகுப்பு

(பூநகரி)

பூநகரியில் அரசாங்க அதிபரின் பணிப்பில் பிரதேச செயலாளரின் அனுசரணையுடன் நடைபெறும் ஆங்கில வகுப்பில் படிப்பைவிட்டு விலகிய 30 இளைஞர், யுவதிகள் கல்விகற்கின்றனர். இது மாணவரின் ஆங்கில அறிவுக்கு பயனுள்ளதாகவுள்ளது. (34)

# சிறார்களின் திறனாய்வு

(அலவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தினரால் அக்கராயன் பிரதேசத்தில் முன்பள்ளி சிறார்களின் திறனாய்வு விழா இடம்பெறவுள்ளது.

கரிகாலன், கலைவாணி, தமிழறிஞன் ஆகிய முன்பள்ளிகளின் சிறார்கள் பங்கேற்கும் திறனாய்வு விழா நாளை பி.ப. 2.00 மணிக்கு அக்கராயன் யூனியன்குளம் கலைவாணி மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ),(பா)

# கல்வியில் நலிவுற்ற மாணவர்களுக்கு

## வங்கி நிதியம் ஆரம்பம்

(அலவலக செய்தியாளர்)

கல்வியில் நலிவுற்ற மாணவர்களை மேம்படுத்தும் பொருட்டு தியாகி அறங்கொடை நிறுவனத்தினால் வங்கி நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முல்லை மாவட்டத்திற்குட்பட்ட தேறாங்கண்டல் அம்பாள்புரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 20 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு கடந்த 23ஆம் திகதி துணுக்காய் கமநல அபிவிருத்தி நிலையத்தில் கிராமிய அபிவிருத்தி வங்கியினால் கல்விநிதிய சேமிப்பு புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வில் மல்லாவி கிராமிய வங்கிய மேலாளர், தேறாங்கண்டல் வித்தியாலய அதிபர், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை மாவட்டப் பொறுப்பாளர் இ. மாறன், பாண்டியன்குளம் பிரதேச இணைப்பாளர்,ஆசிரியர்கள், மாணவர்கள், பொது மக்கள் எனப்பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(பா)


# நினைவலைகள்

## 2ஆம் ஆண்டு நினைவில்...



மலர்வு 17.07.1940 உதிர்வு 26.06.2001

அமரர்

திருமதி. வேலாயுதபிள்ளை பராசக்தி

செப்புகின்ற வீர அண்ணன்
புலிப்படையின் தலைவன்
சிறப்பாகப்படை நகர்த்த
ஈந்தனளோ மகனை
அன்பிற்கு இருப்பிடமாம்
எங்கள் அம்மா சக்தி
அகிலாண்ட நாயகியே
எண்ணுகின்றோம் தாயே.

## 8ஆம் ஆண்டு நினைவில்...



தாயின் மடியில் 21.06.1970 தாயக மண்ணில் 28.06.1995

சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி சிறப்புத் தளபதி

லெப்.கேணல் கில்மன்/காந்தன்

(வேலாயுதபிள்ளை -சிவகுமார்)

எம் தலைவரின் வாசலில்
எமது கொடி அசைந்திடும் என்ற உறுதியோடு
எம் தலைவரின் அணியில்
வித்தான உன் உடலால்
வியாபிக்கும் எம் தமிழீழம்
மலருமடா உன் கனவு
மறந்திடோம் உனது பணி.

கில்மனுடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களையும்
இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

சில்வா றோட்,
வட்டக்கச்சி.

உங்கள் நினைவுடன் குடும்பத்தினர்.

(3401)

## சிந்தனைக்கு

சத்தியத்திற்காகச் சாகத் துணிந்து விட்டால் ஒரு சாதாரண மனிதப் பிறவியும் சரித்திரத்தைப் படைக்க முடியும்.

**தமிழீழத் தேசியத்தலைவர்**



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 28-06-2003

## ஓட்டை எங்கே உள்ளது.

கொழும்பில் சிறிலங்கா பொலிசாரின் சுற்றிவளைப்புத் தேடுதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. பல தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, வெளிவரும் அறிவிப்புக்களின் அடிப்படையில் யுத்த நிறுத்த காலத்திற்கு முற்பட்ட– அதாவது, பொ. ஐ. முன்னணியின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தது போன்ற கெடுபிடிகள் கொழும்பில் நிகழலாம் என்பது போல் உள்ளது.

கொழும்பில் சுற்றிவளைப்புத் தேடுதல் மற்றும் தற்காலிக சோதனைச் சாவடிகளை நிறுவுதல் போன்றவற்றிற்காக விசேட படைப் பிரிவென்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்கென ஆளணி மற்றும் வளங்களும் ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளன. ஆகையினால், இனிக் கொழும்பில் தமிழ் மக்கள் கெடுபிடியற்ற தொரு வாழ்கையை எதிர்பார்ப்பது கடினமே.

கொழும்பில் முன்பைப்போலவே தமிழ் மக்கள் பொலிசில் பதிவு செய்ய வேண்டிய நிலை உருவாகலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது குறித்த முடிவு சில நாட்களில் பொலிஸ் தரப்பால் எடுக்கப்படலாம் எனக் கூறப்படுகின்றது. இதேவேளை, தமிழ் மக்கள் இவ்வாறு பொலிசில் பதிவு செய்வதில் என்ன தவறு இருக்கின்றது எனக் கோரும் பொலிஸ் அதிகாரிகளும் இல்லாமல் இல்லை. அதாவது, தமிழ் மக்களின் நடமாடும் சுதந்திரமானது பொலிசாரின் கண்காணிப்பிற்குள் இருத்தல் வேண்டும் எனச் சிந்திக்கும் அளவிற்கு சிறிலங்கா பொலிஸ் தரப்பின் ஒடுக்குமுறை சிந்தனை செல்கின்றது.

கொழும்பில் தமிழ் மக்கள் மீது இத்தகைய கெடுபிடிகளை அரசாங்கம் மேற்கொள்வதற்கு அண்மையில் தெஹிவளைப் புலனாய்வுத்துறைப் பொறுப்பதிகாரி தமிழ் இளைஞர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டதே காரணம் எனக் கூறப்படுகின்றது. ஆனால், உண்மையில் அது ஒரு சந்தர்ப்பமே ஒழிய அது தான் காரணம் என்றில்லை.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்கனவே கொழும்பில் புலிகளின் ஊடுருவல் அதிகரித்திருப்பதாகக் குற்றம்சாட்டி வந்தார். அரசாங்கம் பாதுகாப்பு ஏற்பாடுகளில் கவனமற்றிருப்பதாகவும், இது ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் எச்சரித்த வண்ணமிருந்தார். இதற்கு ஏற்றாப்போல் புலனாய்வுத்துறையும் சனாதிபதி சந்திரிகாவிற்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்ததாகவும் `தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், புலனாய்வுத்துறை அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டதைமடுத்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினைத் திருப்திப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தேவை எழுந்தது. அதாவது, பாதுகாப்பு என்ற விடயத்தினை தமது அரசாங்கத்திற்கு எதிராகச் சனாதிபதி கையில் எடுக்காமல் மேற்கொண்டுள்ள நடவடிக்கையே ஆகும்.

ஆனால், இப் புலனாய்வுத்துறை அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டமையானது கொழும்பின் பாதுகாப்பு ஏற்பாட்டில் தற்பொழுது ஏற்பட்டதாகச் சனாதிபதி கூறும் பாரிய இடைவெளிகளினாலா அன்றி சிறிலங்கா புலனாய்வுத்துறையில் உள்ள பெரிய ஓட்டைகளினாலா என்பதே இன்று எழுப்பக்கூடிய கேள்வியாகும். ஏனெனில், ஒரு அதிகாரி சுட்டுக்கொல்லப்படுகின்றமை என்பது யுத்த நிறுத்தத்தின் பின்னர் தான் இடம்பெறும் சம்பவம் அல்ல. ஒரு புலனாய்வுத்துறை அதிகாரியைச் சுட்டுக் கொல்வதற்கு யுத்த நிறுத்தம் ஒன்று தேவையானதும் அல்ல. இதனைக் கடந்த கால நிகழ்வுகளே வெளிப்படுத்தப் போது மானவையாகும்.

சுட்டுக் கொல்லப்பட்ட புலனாய்வுத்துறை அதிகாரியை விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினரே சுட்டுக் கொன்றார் எனச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கூறிக் கொள்கின்றன. ஆனால், இதில் எத்தனை துரம் உண்மையுள்ளது? இது இராணுவ, அரசியல் ரீதியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையா? அன்றித் தனிப்பட்ட ரீதியிலான கொலையா? என்பது குறித்தும் தீவிரமான, அதேவேளை, நடுநிலையான விசாரணைகளின் பின்பே உண்மை தெரியவரும். ஏனெனில் கொல்லப்பட்ட புலனாய்வுத்துறை அதிகாரிக்கும் அவர் மீது தாக்கு தல் நடத்தியவருக்கும் இடையில் மிக நெருக்கமான உறவு இருந் துள்ளது. அதாவது, புலனாய்வுத்துறை அதிகாரியின் தங்குமிடத் திற்கு சோதனைகள் எதுவுமின்றி தாக்குதல் நடத்திய இளைஞன் சென்று வரக்கூடியவராக இருந்துள்ளது.

இந்நிலையில், தற்பொழுது எழும் கேள்வியானது அந்தளவிற்கு நம்பகத்தன்மை உள்ளவராக இவ் இளைஞரால் எவ்வாறு நடந்து கொள்ள முடிந்தது? அவ் இளைஞனுக்கும்–அதிகாரிக்கும் இடையில் இருந்த நெருக்கமானது புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக் கொண்டதினால் உருவானதா? அன்றி தனிப்பட்ட ரீதியில் பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவரோ அன்றி புலனாய்வுத்துறை அதிகாரிக்கு இவ் இளைஞன் செய்த பெரும் உதவிகளால் வந்ததா? என்பதே ஆகும்.

இதில், எதுவாகிலும், இவ் இளைஞரால் இவ் அதிகாரி நன்மை அடைந்திருத்தல் வேண்டும் அன்றி அவ் இளைஞன் அப் புலனாய்வுத்துறை அதிகாரியை நன்கு ஏமாற்றியிருத்தல் வேண்டும். ஆனால், ஒரு புலனாய்வுத்துறை அதிகாரியை முற்றிலுமாக ஏமாற்றுவதென்பது கடினமானதொரு காரியமே. அவ்வாறு இல்லாதுவிடில், இதே பாணியில் இவ் அதிகாரி பலருடன் குறிப்பாக தமிழ் தேசவிரோதக் குழுவினருடன் கடைப்பிடித்த வழி முறை இவ் இளைஞனிடம் தோல்வி கண்டிருத்தல் வேண்டும்.

எது எவ்வாறு இருப்பினும், கொழும்பில் புலனாய்வுத்துறை அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டதற்கும் யுத்த நிறுத்தத்திற்கும் தொடர்புடையதாகக் காட்ட விளைவதானது அர்த்தமற்றவாதமாகும். ஏனெனில், யுத்த காலத்தில் – அதாவது, உச்ச பாதுகாப்பு கொழும்பில் இருந்த காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவம் போன்ற பாரிய சம்பவங்கள் எதுவும் கொழும்பில் தற்பொழுது இடம்பெற்றுவிடவில்லை. ஆகையினால், புலனாய்வுத்துறையில் உள்ள ஓட்டைகளுக்காகவும், அதிகாரிகளின் பலவீனங்களினாலும் விளையும் சம்பவங்களுக்காகவும் கொழும்பில் இயல்பு வாழ்க்கையைப் பாதிப்பிற்குள்ளாக முனைவது பொருத்த மற்ற நடவடிக்கையாகும்.

# பாதுகாப்பு, உள்துறை அமைச்சுகளை சனாதிபதிக்கு ரணில் விட்டுக் கொடார்

## - சனாதிபதி அழுத்தம் கொடுப்பின் தானே பொறுப்பேற்பார்

அமைச்சரவை மாற்றம் குறித்த சனாதிபதியின் கருத்துக்கு சிறிலங்காப்பிரதமர் ரணில் விட்டுக் கொடுக்கும் சாத்தியமில்லை எனினும் பிரதமர் நாடு திரும்பியதும் அமைச்சரவையில் மாற்றங்களைக் கொண்டுவருவது குறித்து சனாதிபதி ஆலோசனைகளை நடத்துவார் என தெரிவிக்கப்படுகிறது. பாதுகாப்பு உள்துறை அமைச்சுப் பொறுப்புக்கள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எந்தவித விட்டுக் கொடுப்புக்களையும் செய்யமாட்டார் என்றும் சனாதிபதியின் கோரிக்கைக்கு தனது நிலைப்பாட்டைத் தெரிவிப்பார் என்றும் பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தகைய சூழ்நிலையில் இந்த அமைச்சுக்களை சனாதிபதி பொறுப்பேற்கும் நிலை ஏற்படுமானால் அதற்கு முன்னர் இந்த அமைச்சுக்களை தான் பொறுப்பேற்பது குறித்து பிரதமர் முடிவினை எடுப்பார் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அமைச்சுக்களின் பொறுப்புக்களைத் தான் எடுத்துக்கொண்டு இந்த அமைச்சுக்களின் பிரதி அமைச்சர்களாக இதே அமைச்சர்களை நியமிப்பதுடன் அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர்களாக இவர்கள் பதவி வகிக்கும் வகையில் வேறு அமைச்சுப் பொறுப்புக்கள் இவர்களுக்கு வழங்க ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு, உள்துறை அமைச்சுக்களின் விடயத்தில் சனாதிபதி விடாப்பிடியாக நின்றால் இத்தகைய வழியில் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் சனாதிபதி எத்தகைய பொறுப்புக்களையும் கையேற்க அரசாங்கம் அனுமதிக்காது என்றும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

சனாதிபதி அமைச்சரவையில் மாற்றங்களைக் கொண்டுவருவது குறித்து பிரதமருடன் ஆராயுமிடத்து சனாதிபதிக்கும் அரசாங்கத்துக்குமிடையேயான உறவில் மேலும் விரிசல் அடையுமென தெரிவிக்கப்படுகிறது.

# மேல் கொத்மலைத் திட்டத்தை எதிர்த்து அரசிலிருந்து இ.தொ.கா.விலகாது


## - யோகராஜன் பா.உ.தெரிவிப்பு

மேல் கொத்மலைத் திட்டத்தை ஒரு காரணமாகக் கொண்டு அரசாங்கத்திலிருந்து வெளியேற மாட்டோம். இத்திட்டத்தை நடைபெறவிடாமல் தடுக்கும் சக்தி இலங்கைத் தொழிலாளர் காங் கிரசுக்கு இருக்கிறது என இ.தொ.கா. உபதலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஆர்.யோகராஜன் தெரிவித்தார்.

இலங்கை வரவிருக்கும் ஜப்பான் நாட்டின் விசேட தூதுவர் யசுகி அகாஷியைச் சந்தித்து இ.தொ.கா. பேச்சு நடத்தும் என்றும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் ஏற்படும் பின் விளைவுகளை எடுத்துக் கூறி உடனடியாக நிறுத்துமாறு கோரப்போவதாகவும் யோகராஜன் தெரிவித்தார்.

அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த எத்தனையோ திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்ட சரித்திரம் உண்டெனவும் அவர் கூறினார்.

# வவுனியாவில் இரண்டு கடைகள் தீப்பிடித்து எரிந்து நாசம்



வவுனியாவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இரண்டு கடைகள் தீயினால் எரிந்து போயுள்ளன.

வவுனியாவின் பஜார் வீதியிலுள்ள தேன்சுரபி கடையும் அதனைச் சேர்ந்த அருகிலுள்ள உணவுக் கடையும் தீப்பிடித்து எரிந்துள்ளன.

நேற்று முன்தினமிரவு எட்டு மணியளவில் ஏற்பட்ட இத்தீயினால் இவ்விரு கடைகளும் முற்றாக எரிந்துள்ளன.

இத்தீ பரவியமைக்கான காரணம் சரியாகத் தெரியவில்லை. ஆயினும் மின்னொழுக்கினால் ஏற்பட்ட தீயே இதற்குக் காரணம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

இத்தீவிபத்து தொடர்பாக வவுனியா பொலிஸார் புலன் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இத் தீ விபத்தினால் இரண்டு கடைகளினதும் ஐந்து இலட்ச ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது. (10)

# பாதுகாப்புச் சபைக்கூட்டத்தை வாராந்தம் நடத்த சனாதிபதி சந்திரிகா தீர்மானம்

இதுவரை காலமும் மாதாந்தம் நடத்தப்பட்டு வந்த பாதுகாப்புச் சபைக்கூட்டத்தை இனி வாராந்தம் நடத்துவதற்கு சனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளார்.

முப்படைத் தளபதிகளையும் தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் வாராந்தம் சந்தித்துப் பேச அவர் தீர்மானித்துள்ளதாக சனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் பாதுகாப்பு அமைச்சை அவர் தனது பொறுப்பில் எடுத்துக் கொள்ளும் சாத்தியக் கூற்றை அவர் இதுவரை மறுக்கவில்லையென அவரின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் கொழும்பில் தெரிவித்துள்ளார்.


புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் வழங்க வேண்டுமாயின் மாகாணசபை மட்டங்களில் தான் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே சனாதிபதியின் கருத்தாகும். பொதுசன ஐக்கிய முன்னணியின் தீர்வுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படுவது நல்ல ஆரம்பம் எனக் கருதுவதாக அவரது பேச்சாளர் கூறியுள்ளார்.

# 'விம்பிள்டன்' மூன்றாம் சுற்றிற்கு கப்ரியாட்டி, மேரி பியஸ் தகுதி!

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் மகளிர் பிரிவு ஒற்றையர் ஆட்டத்தில் அமெரிக்காவின் ஜெனிபர் கப்ரியாட்டி, பிரான்ஸின் மேரி பியஸ் முதலானோர் மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் அமெரிக்காவின் ஜெனிபர் கப்ரியாட்டி மேரி கயனிந்ராரியனை 6:2, 6:4, எனும் நேர் செட்களில் வென்றுள்ளார்.

மற்றொரு ஆட்டத்தில் பிரான்ஸ் மேரி பியஸ், கிரிஸ் நாட்டைச் சேர்ந்த எலினியை 6:4, 6:1 எனும் நேர் செட்களில் வென்று மூன்றாம் சுற்றுக்குத் தகுதிபெற்றுள்ளனர். ஆண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் அமெரிக்காவின் அந்திரே அகாஸி, ஜேர்மனியின் வேர்ப்ஸ் முஸரை 6:3, 7:6, 6:3 எனும் செட்களில் வென்றுள்ளனர்.



## நோர்வே குழு- தமிழர் புனர்வாழ்வுக்கழகம்

# வன்னியில் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தல் குறித்து ஆராய்வு

(கிளிநொச்சி)

வன்னியில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நோர்வே குழுவினருக்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழக பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று நடைபெற்றுள்ளது.

இக்கலந்துரையாடலில் நோர்வேத் தரப்பில் அபிவிருத்தி நிதியத்தின் இயக்குநர், நடவடிக்கைக் குழுத் தலைவர் ஆவிட் சொல்கெய்ம், சுனிவா பீற்றர்சன் ஈட்ஸ்வோல் உட்பட 10 பேர் கலந்துகொண்டனர். தமிழர் புனர் வாழ்வுக்கழக தரப்பில் திட்டப்பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி உதவி நிறைவேற்று பணிப்பாளர் இனியவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேற்படி நோர்வே குழுவினர் தமது வேலைத் திட்டம் தொடர்பாக கலந்துரையாடியதுடன் 13-20வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கான கல்வித்தரம் பேணுதல், பயிற்சி வழங்குதல் போன்ற வேலைத்திடடங்களை மேற்கொண்டு வருவதாகவும், இவ்வேலைத்திட்டம் தென் பகுதியில் நடைமுறையில் இருப்பதாகவும், வன்னியில் இதனை மேற்கொள்ள இங்கு மூன்று மாத காலம் தங்கி நின்று நிலைப்பாடுகளைப் படித்த பின்னர் எதிர் வரும் எதிர்வரும் சனவரி மாதத் திலிருந்து மேற்கொள்ளமுடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

# இடைக்கால நிர்வாக சபையைக் கண்டித்து ஜே.வி.பி.யுடன் இணைந்து போராட்டம்

## சிறிலங்கா சுதந்திரக்கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபையை அமைப்பதற்கான அரசின் நகல் சட்ட யோசனையைக் கண்டித்து நாடு தழுவிய ரீதியில் மாபெரும் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்த இருப்பதாகச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஸ்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாக சபையை அமைப்பதற்கு சனாதிபதியின் ஆலோசனை பெறப்பட வேண்டும். இதுவரை அவ்வாறான ஆலோசனை எதுவும் பெறப்படவில்லை.

அரசியலமைப்புக்கு முரணாக இடைக்கால நிர்வாக சபை அமைக்க முடியாது.

இதற்கு எதிராக ஜே.வி.பியுடன் இணைந்து நாடு பூராகவும் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கைவிடாத நிலையில் அங்கு இடைக்கால சபை அமைக்கப்படுமானால் அது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும்.

அரசாங்கம் தன்னிச்சையாக செயற்படுகின்றது. எதிர்க்கட்சி அதனை அனுமதிக்காது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### உணர்வெழுச்சியுடன்...

அளவிலான உருவப்படத்தினை மக்கள் தாங்கிச் செல்ல அதனைத் தொடர்ந்து பிரமாண்டமான முறையிலான போர்ப்பூத ஊர்தியும் பேரணியும் நகர்ந்து சென்றன. போர்ப்பூதத்தின் அங்கத்தில் போர்க்கருவிகள் காணப்பட்டன.

போர்ப்பூத ஊர்தியைத் தொடர்ந்து மஞ்சள் சிவப்பு வர்ணத்திலான உடை அணிந்தவாறு பொங்குதமிழ் அணியினர் பேரணியில் நடந்து செல்ல மும்முனைகளிலும் இருந்து ஆரம்பமான பொங்குதமிழ் எழுச்சிப் பேரணிகள் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தை வந்தடைந்தன.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் மாலை 3.15 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதற்கு பல்கலைக்கழக மாணவன் பிரதீபன் தலைமை தாங்கினார்.

மைதானம் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேடையில் அரைவட்ட வளைவில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுடைய படம் வைக்கப்பட்டிருந்ததுடன் "எமது நிலம் எமக்கு வேண்டும்" என்ற வாக்கியமும் பொறிக்கப்பட்டிருந்தது.

ஆரம்பத்தில் பொதுச்சுடரை பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தேசியக் கொடியை மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றி வைத்தார்.

பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு மிகவும் உணர்வு பொங்க தொடர்ந்து இடம்பெற்றது.

மேடையின் வலதுபுறத்தில் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் வீடு இருப்பது போன்ற ஒரு மாதிரி வடிவ அமைப்பிலான வீடு ஒன்று அங்கு அமைக்கப்பட்டிருந்தது. இந்த உயர் பாதுகாப்பு வலயத்தில் இருக்கும் இந்த வீட்டை மீட்கும் வகையில் அங்கு அரங்காற்றுகையில் ஈடுபட்டவர்கள் களமிறங்கினார்கள். தொடர்ந்து மக்களும் உணர்வு பொங்க அந்த இடத்திற்குச் சென்று முட்கம்பிகளையும், இராணுவக் காப்பரண்களையும் தூக்கி எறிந்து அந்த வீட்டை மீட்டு அதில் அவர்கள் உற்சாகமாக ஏறி இருந்தனர்.

இதனைத் தொடர்ந்து எழுச்சி உரைகள் இடம்பெற்றன.

முதலாவதாக பேராசிரியர் மோகனதாஸ் உரையாற்றினார்.

தொடர்ந்து யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி உரையாற்றினார்.

இந்நிகழ்வில் ஒன்றரை லட்சத்திற்கு மேற்பட்ட மக்களுடன் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர். பௌத்த மதகுருமார், இந்துமத குருமார், கிறிஸ்தவ மதகுருமார் ஆகியோரும் கலந்து கொண்டனர். (27,33)

### யுத்தமேகம்....

திணிக்கப்படுகின்றது.

இந்நிலையை நாங்கள் மாற்ற விரும்புகிறோம். இந்த நோக்குடன் குடாநாட்டில் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் பொங்கு தமிழராய் கிளர்ந்தெழுந்து வந்து இங்கு அணிதிரண்டுள்ளோம். நாம் இந்த உலகிற்கு ஒரு செய்தியைப் பிரகடனம் செய்கின்றோம். இனியும் எம்மால் இழுபடமுடியாது எங்கள் வீடுகளுக்கு நாங்கள் போக வேண்டும். உங்கள் வீடுகளிற்கு நீங்கள் போங்கள். நமது இயல்பு வாழ்க்கையை நாம் கட்டி எழுப்ப வேண்டும்.

தமிழ் மக்கள் அச்சமற்ற சூழலில் சமாதான நடைமுறையில் செயல் முனைப்புடன் பங்குபற்றும் நிலை அதற்கு வசதியாகத் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அதிகார பலம் பொருந்திய இடைக்கால அரசு ஒன்று கையளிக்கப்பட வேண்டும். அந்த இடைக்கால அரசை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும்.

இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருக்கும் அச்சம் நிறைந்த இத்தகைய சூழலில் தமிழ் மக்கள் சமாதானம் பற்றிச் சிந்திக்க முடியாது.

மையைத் தோற்றுவிக்கப்பட வேண்டும். அத்தகைய ஓர் சூழ்நிலையில் தமிழர்களின் அபிலாசைகளான தனித் தேசிய இனம், மரபுவழித் தயாகம், சுயநிர்ணய உரிமை என்பவற்றின் அடிப்படையில் பேச்சு நடத்தப்பட்டு இனப் பிரச்சினைக்கு நீதியானதும் கௌரவமானதுமான ஓர் தீர்வு காணப்பட வேண்டும். அதனூடாகவே ஓர் நிரந்தர சமாதானம் சாத்தியமென்பதை நாம் பிரகடனம் செய்கின்றோம்.உயர்ந்தவர்கள் நாமெல்லோரும் உலகத்தாய் வயிற்றுமைந்தர். நசிந்து இனிக் கிடக்கமாட்டோம் நாமெல்லாம் நிமிந்து நிற்போம். (27,33)

### மக்கள்...

தமிழர் வாழ்வுக்கு ஒரு வரலாறு உண்டு. தமிழர் வாழ்வுரிமைப் போராட்டத்திற்கும் ஒரு வரலாறு உண்டு அதேபோல் பொங்கு தமிழ் எழுச்சிக்கென்று ஒரு வரலாறுண்டு.

பேசித்தீர்த்துக்கொள்ளலாம் வாருங்கள் என்று தந்தை செல்வாவை அழைத்து ஒப்பந்தங்கள் எழுதப்பட்டு கிழித்தெறிவதும், பேச்சுவார்த்தைகள் மேசைகளில் பேசவதுமாய் காலம் கடத்தி தமிழர்களை ஏமாற்றிய காலம் போய் குட்டக் குட்ட குனிபவனும் மடையன் குனியக் குனிய குட்டுபவனும் மடையன் என்ற அடிப்படையில் தந்தை செல்வா கூட சமஸ்டிக் கொள்கையைக் கைவிட்டு தனியரசு அமைக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தார்.

இதனைத் தமிழர்களும் விருப்புடன் ஏற்றுக்கொண்டனர். வரலாற்றின் தோற்றமாக இந்த ஆயுதப் போராட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆரம்பத்தில் கெரில்லாப் போராட்டமாகவும் பின்பு மரபுவழிப் போராட்டமாகவும் தற்பொழுது முதிர்வுகண்ட மக்கள் ஒன்று திரண்ட நவீனத்துவமான போராட்டமாகவும் வளர்ச்சி கண்டு நிற்கிறது. தேசியத்தால் தோற்றம் பெற்று தேசியத்தால் வளர்க்கப்பட்டு இன்று சர்வதேச மட்டத்துக்கு வியாபித்து நிற்கிறது.

இலங்கைத் தீவில் இரண்டு படைகள் சம பலத்துடன் இருக்கின்றன என்பது யதார்த்தமாக இருப்பதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் காணப்படுகின்றது.

மக்கள் பங்கேற்கும் ஆயுதப் போராட்டத்துடனும் அதற்கு சமாந்தரமான மக்கள் எழுச்சி போராட்டத்துடனுமே உலக விடுதலைப் போராட்டங்கள் வென்றெடுக்கப்பட்டுள்ளன.

அப்போதெல்லாம் ஆயுத முனை ஆக்கிரமிப்பு அடக்குமுறைகளும் தகர்த்தெறியப்பட்டுள்ளன.

இந்த அடிப்படையிலேயே எமது விடுதலைப் போராட்டத்தின் பின்னணி அமைந்துள்ளது.

மக்கள் எழுச்சி எனும் பெருங்கடலில் எதிரியின் எதிர்ப்பு அலைகள் அழிந்துவிடும். அந்த எழுச்சிதான் இராணுவத்தின் இரும்புச் சிறையில் வைக்கப்பட்டிருந்த பொதுமக்களின் மனங்களிலும் இருந்து கிளர்ந்தெழுந்ததே 2001 சனவரியில் பொங்கு தமிழாகத் தோன்றி உலகின் செவிகளுக்கு தமது அரசியல் அபிலாசைகளைப் பிரகடனபபடுத்தியது.

தலைமைக்கு வலுவையும், வேகத்தையும் ஊட்டி, போராளிகளுக்கு உத்வேகத்தையும் கொடுக்கும்.

தமிழரின் இராணுவபலமே தமிழர்களின் வாழ்வில் பலமாக அமைகின்றது. இதனை தமிழர்கள் ஒருபோதும் இழக்கமுடியாது.

மேலும் மேலும் இராணுவபலம் பலப்படுத்தப்பட வேண்டும் என்பது சண்டைக்கானதல்ல.

நிரந்தர சமாதானத்திற்காக, கௌரவத்திற்காக, சுதந்திரத்திற்காக, மகிழ்ச்சிக்காக என்பதை அனைவருமே ஏற்றுக் கொள்கிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (33)

# சமரும் மருத்துவமும் நூல்; நாளை வெளியீட்டு விழா

(அலுவலக செய்தியாளர்)

தமிமீழ கலை பண்பாட்டுக்கழகத்தினரின் ஏற்பாட்டில் தூயவனின் சமரும் மருத்துவமும் எனும் ஒரு போராளி மருத்துவனின் சமர்க்களப் பதிவுகள் நூல்நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நாவலர் கலாச்சார மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.மேற்படி நூல் வெளியீட்டு விழா கடந்த 22ஆம் திகதி நடைபெற விருந்து பிற்போடப்பட்டமைகுறிப் பிடத்தக்கது. (பா)

# பாடசாலை மாணவிகள் இருவரைக் காணவில்லை

## மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையீடு

(வவுனியா)

வவுனியாவைச் சேர்ந்த இரண்டு பாடசாலை மாணவிகளைக் காணவில்லை என வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவிடம் பெற்றோரால் முறையிடப்பட்டுள்ளது.

பூந்தோட்டம் அகதி முகாமைச் சேர்ந்த செல்லத்துரை பிறேமா (வயது-15), புதுக்குளத்தைச் சேர்ந்த செபஸ்ரியாம்பிள்ளை மேரி (வயது-17) ஆகியோரே காணாமல் போயுள்ளனர்.இது தொடர்பான விசாரணைகளை வவுனியாமனித உரிமை ஆணைக் குழுவினர் ஆரம்பித்துள்ளனர்.

# வெள்ளவத்தைப் பகுதி சுற்றிவளைத்துத் தேடுதல்

(கொழும்பு)

வெள்ளவத்தைப் பகுதிநேற்று அதிகாலை சிறிலங்கா படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டுள்ளது. அதிகாலை 4.00 மணியளவில் வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள வீடுகளுக்கும் விடுதிகளுக்கும் சென்ற பொலிசார் வீட்டில் உள்ள அனைத்துப் பொருட்களையும் சோதனையிட்டதுடன் வசிப்போர் தொடர்பான விபரங்களையும் பதிவு செய்துள்ளனர்.

அண்மைக்காலமாக சிறிலங்கா படையினரும் பொலிசாரும் கொழும்பில் தமது தேடுதல் நடவடிக்கைகளை அதிகரித்துள்ளமையினால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

# சர்வதேச மனித உரிமைகள் பார்வையாளர் ஆகஸ்ட் நடுப்பகுதியில் சிறில.வருவார்

சர்வதேச மனித உரிமைகள் பார்வையாளர் சிறிலங்காவில் திடீரென அதிகரித்துவரும் வன்முறைகள் தொடர்பாக ஆராய்ந்தறிய அழைக்கப்பட்டுள்ளதாகப் பொது சன ஐக்கிய முன்னணிவட்டாரங்கள் தெரிவித்தன. பெல்ஜியத்திலிருந்து 15 உறுப்பினர்களைக் கொண்டவன் முறைகளற்ற அமைதிப்படையினர் எதிர்வரும் ஆகஸ்ட் மாத நடுப்பகுதியில் சிறிலங்காவுக்கு வருகைதரவுள்ளனர்.

## - புலிகளின் கப்பல் மீதான தாக்குதல் -

# கண்காணிப்புக் குழுவின் அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டது.

(கொழும்பு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் கப்பலை சிறிலங்கா கடற்படையினர் தாக்கி மூழ்கடித்தமை தொடர்பான போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் அறிக்கை விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்துக்கும் சிறிலங்கா அரசாங்கத்தின் சமாதான செயலகத்துக்கும் அனுப்பிவைக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து இதனை ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை.

### ஈ.பி.டி.பி.யின்...

இருவர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுள்ளனர்.

இவர் முன்னாள் ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் சங்கர் குணசேகரத்தின் நெருங்கிய நண்பராவார்.

### கிழக்கில்...

படுமானால் 10 நாட்களுக்கு விடுதலைப்புலிகள் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றி விடுவார்கள் என கடந்த புதன்கிழமை சனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் கூறியிருந்தார்.

புலிகள் புலனாய்வுச் செயற்பாட்டாளர்களைத் தாக்கி படையினரைப் பலவீனப்படுத்தி வருவதாகவும் ஹரீம் பீரிஸ் கூறியுள்ளார்.

### அச்சமூட்டும்....

யினை மேற்கொண்டன.

ஆனால், உலங்கு வானூர்தியின் அச்சமூட்டும் நடவடிக்கைகளுக்கு மக்கள் அடிபணியாது எழுச்சி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, கலகமடக்கும் பொலிசாரும் ஒத்திகை நடவடிக்கையில் ஈடுபட்டு மக்களை அச்சமூட்டினர்.

# சாவு அறிவித்தல்

## சுப்பிரமணியம் - மயில்வாகனம் (நடராசா)

அராலியைப் பிறப்பிடமாகவும், இருபாலையை வதிவிடமாகவும், தற்போது வள்ளிபுனம் அத்தார் திட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மயில்வாகனம் அவர்கள் 27.06.2003 அன்று காலமானார். அன்னார் மங்கையற்கரசியின் அன்புக் கணவரும், அசோக் குமார், அருள்தாஸ், அஜித்தா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சாந்தகுமார் விஜயரஞ்சினி ஆகியோரின் மாமனாரும், லுக்சனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (28.06.2003) சனிக்கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

தகவல்:
அசோக்,
(மகன்)

(2288)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.